இல்லை என்று, அவரது உரையை மாற்றி எழுதி அனுப்புமாறு கூறினர். டாக்டர் அம்பேத்கர் அவர்கள் உரைய மாற்றியமைக்க முடியாது என்று கூறி மாநாட்டிற்கு போகவில்லை. இந்த உரையை ‘Annihilation of Caste’ ‘சாதி ஒழிப்பு’ என்ற தலைப்பில் நூல் வெளியிட்டு மக்களுக்கும், மாநாட்டு நிர்வாகிகளுக்கும் அனுப்பினார். இதில் ‘சாதி அமைப்பு’ எந்த மதக் கோட்பாடுகளின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டதோ, அந்த மதக் கோட்பாடுகளை அழித்தொழிக்காமல் சாதியை உடைப்பது சாத்தியம் இல்லை என்ற புரட்சிக்கரமான புதிய கருத்தை விவரமாக எழுதியிருந்தார், பௌத்தம்தான் தர்மவழி காட்டும் மதம். அதை நான் ஏற்கப்போகின்றேன் என்று எழுதியிருந்தார்.

இந்தியாவிலேயே முதன்முத□ல் இந்த நூலை தந்தைப் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தமிழாக்கம் செய்து தன் பத்திரிக்கையில் வெளியிட்டு, கூட்டங்களிலும் மக்களுக்கு எடுத்துரைத்தார். டாக்டர் அம்பேத்கர் அவர்களின் புரட்சிக் கருத்துகளை தமிழ் மக்களிடையே பரப்பிய பெருமை தந்தை பெரியாரையே சாரும். இந்த நூ□ல் சொல்□யுள்ள ஆலோசனைகள், கருத்துகள் இன்றும் மிக முக்கியமானவை. ஜாதி ஒழிய அவசியமானவை.

மனிதன் என்பவனுக்கு சாப்பாடு மாத்திரம் முக்கியமல்ல. அவனை மனிதன் என்று சொல்ல வேண்டுமானால் அவன் பகுத்தறிவு உள்ளவனாக தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். உருவத்திலே மனிதனாக இருப்பவன் எல்லாம் மனிதன் அல்ல, அவன் உள்ளத்தாலே, பண்புள்ளவனாக வாழ்க்கையில் நடந்து காட்டவேண்டும். அந்த மனிதனை ஆக்குவது ஆன்மீகம். ஒருவன் அறிவாளியாக இருக்கலாம், சிறந்த மனிதனாகவும் இருக்கவேண்டும். அறிஞன், சிறந்த மனிதனாக, பண்பாளனாக ஆவது ஆன்மீக வளர்ச்சியினாலே ஆகும்.

“ஆறாவது அறிவுக்குக் காரணமானது ஆன்மா” என்றும், “ஆறாவது அறிவு இல்லாத மற்ற உயிரினங்களுக்கு ஆன்மா இல்லை” என்றும், “அவை உடல், உயிர் ஆகிய இரண்டு பகுதிகளை மட்டுமே உடையன” என்றும், “மனிதனுக்கு மட்டுமே உடல், உயிர், ஆன்மா ஆகிய மூன்று பகுதிகள் இருக்கின்றன” என்றும் “மனிதனுக்கு மட்டுமே இருக்கும் இந்த ஆன்மாவே கடவுளை உணர்ந்து அனுபவிக்கக் கூடிய ஆற்றலுடையது” என்றும் கூறுகின்றார் முனைவர் தெய்வநாயகம் அவர்கள்.

“ஆன்ம தரிசனம் என்பது அனைத்து உயிர்களிலும் தான் இருப்பதையும், தன்னுள் அனைத்து உயிர்களும் இருப்பதையும் பேதமறக் காண்பதே” என்று கூறுகிறார் கவியோகி பேகன் (டாக்டர் பாண்டியன் I.A.S. Rtd.,) அவர்கள். “கண்மூடிப்பழக்கமெல்லாம் மண்மூடிப் போக” என்றார் வள்ளலார். அவர் உருவாக்கியது சத்திய ஞான சபை.

7ஆம் நூற்றாண்டிலே தோன்றிய திருஞானசம்பந்தர் அந்தணர் குலத்திலே பிறந்தவர். அவர் தன்பக்கத்திலே இசை வாசிக்கின்ற ஒரு ஆதிதிராவிடரான திருநீலகண்டரை யாழ் இசைப்பவராக வைத்திருந்தார். மகாகவி பாரதியும் ஒரு ஆதிதிராவிடருக்கு □கனக□ங்கம் அவருக்கு பூணூல் போடுகிறேன். நீ இன்று முதல் பிராமணன் என்று சொல்□ அவரைத் தம் பக்கத்திலேயே வைத்துக் கொண்டிருந்தார். ராஜாஜி முனிசிபல் தலைவராக இருந்தபோது சேலத்திலே, வீட்டிலேயே ஆதிதிராவிடரை வைத்திருந்தார். இந்த நேரத்தில் ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது.

நான் திருநெல்வே□ மாவட்டம் சேரன் மகாதேவியில் 1957□59 சப்கலெக்டராக இருந்த காலத்தில் ராதாபுரம் சப் தாலுக்காவில், அனைத்து சாதியினரும் அனைத்து மதத்தினரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று அரசு நிலத்தில் சுமார் 200 குடும்பங்களுக்கு வீட்டுமனைகளைக் கொடுத்து அவர்கள் அனைவரும் ஒன்றாகக் குடியிருக்குமாறு கூட்டு குடியிருப்பை ஏற்பாடு செய்தேன். அங்குள்ள எல்லா மதத்தினரும் சாதியினரும் இதை ஏற்றுக் கொண்டனர். மாவட்ட ஆட்சியாளரும் மற்ற அரசியல் தலைவர்களும் இதை வரவேற்றுப் பாராட்டினார்கள். திருவள்ளுவர் காலத்தி□ருந்து ஒரே தத்துவத்தைத் தமிழ் பெரியவர்கள் சொல்□க் கொண்டு வருகிறார்கள். “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்று சொன்னார் திருவள்ளுவர். “ஒன்றே குலம், ஒருவனே தேவன்” என்றார் திருமூலர். “அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசிக்கும் ஆனந்த மூர்த்தியாகி’ என்று சொன்னவர் தாயுமானவர், “உலகத்தை ஆண்டவன் அருள்ஜோதியாக பார்க்கிறேன்” என்று சொன்னார் வள்ளலார். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனார் பாடினார்.

கௌதம புத்தர், நந்தனார், சேந்தனார், திருப்பாணழ்வார், ராமானுஜர், மகாத்மா பூலே லோகத்தவாதி, கபீர் ரவிதாஸ், சோகமேளா, நாராயணகுரு, விவேகானந்தர் போன்றவர்களும், சாதி ஏற்றத்தாழ்வு, தீண்டாமை ஒழிப்பு போராட்டத்தில் சீரிய பணிகள் செய்த செம்மல்கள். இன்று பிற்படுத்தப்பட்டோர் மனம் திருந்தி, தாழ்த்தப்பட்ட மக்களைத் துன்புறுத்தாமல், கொடுமைகள் இழைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கிராமங்களில் நடக்கும் அநீதி, அக்கிரமங்களைப் பார்த்தால், இன்னும் இந்தப் பிற்படுத்தப்பட்ட மக்கள் (Backward Classes) திருந்தவில்லை என்றுதான் சொல்ல வேண்டும் “Who are the sudras” என்ற நூலை டாக்டர் அம்பேத்கர் எழுதி இந்த பிற்படுத்தப்பட்டவரின் நிலையைச் சொல்□ அவர்கள் சமுதாயத்தில் முன்னுக்குவரவும் தாழ்த்தப்பட்ட தீண்டப்படாத மக்களுக்கு உதவி செய்வார்கள் எனவும் எதிர்ப்பார்த்தார். இது இன்று வரை நடக்கவில்லை. இந்த நூலை எழுதிய பின்னர்தான் “Who are the untouchables” என்னும் நூலை டாக்டர் அம்பேத்கர் எழுதினார். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் யாவரும் மேல்ஜாதி என்ற எண்ணத்தை விட்டு தாழ்த்தப்பட்டவர்களையும், சரிசமமாகக் கருதிச் செயல்படவேண்டும்.

நான் முத□ல் குறிப்பிட்டுள்ளபடி இந்து வேதங்களும், சாத்திரங்களும், நூல்களும்தான் ஜாதிப் பாகுபாடுகளுக்கும், தீண்டாமைக்கும், மற்ற சமூக கேடுகளுக்கும், மூலகாரணங்கள் என்று திட்டவட்டமாக ஆணித்தரமாகத் தைரியமாகக் கூறி, எழுதி, கடைசி மூச்சுவரை பாடுபட்டவர்கள் பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர், பெரியார் ஈ.வெ.ரா. அவர்களும்தான். அவர்களின் பணி பொன் எழுத்துக்களில், சரித்தரத்தில், ஜாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு போராட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

நமது அரசியல் சாசனத்தில் (Constitution of India) தீண்டாமை ஒழிக்கப்பட்டு, ஜாதி, மதம், இனம் போன்ற பிரிவுகளில்லாமல், எல்லா மக்களும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், மற்றும் அநேக உரிமைகள் பெற்று நல்வாழ்வு வாழ வழிவகுத்துள்ளது. இது அமுலுக்கு வந்து 60 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்றும் தீண்டாமை, ஜாதி வித்தியாசங்கள், அக்கிரமங்கள், அநியாயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஜாதிகள் இன்று மேலும் வ□மைப் பெற்றுள்ளன. இன்றைய அரசியல் இவைகளை ஊக்குவித்து வளர்த்து விட்டுள்ளது. இளைஞர்களுக்கு, இளைய தலைமுறைக்கு, மாணவர்களுக்கு, தீண்டாமை, ஜாதி பேதமற்ற சமுதாயத்தின் தத்துவம், அவசியம், அரசியல் சாஸனத்திற்கு முக்கியத்துவம் ஆகியவற்றை, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பொது இடங்களிலும் எடுத்துச் சொல்லவேண்டும். இன்று நம் நாட்டிலே பாபாசாகேப் அம்பேத்கர், தந்தை பெரியார் இவர்களுக்குப்பின், சமுதாய சீர்த்திருத்தத்திற்கு, சாத்வீக புரட்சிக்கு சிந்திக்கும், பாடுபாடும் தலைவர்கள் இல்லை. இதற்காகத் தனி இயக்கமும் இல்லை (Movement for Social Reformation and Revolution) இது உண்மையிலேயே பரிதாபமான நிலைமை.

இம் மாநாடு நல்ல கருத்துக்களை நல்கி, ஆக்கபூர்வமான செயலுக்கு வழிகாட்டும் என்று நம்புகின்றேன். இதுதான் நம் அரசியல் சாசனம் வகுத்துத் தந்த டாக்டர் அம்பேத்கர், ஜவஹர்லால் நேரு, சர்தார் படேல், ராஜாஜி, காமராஜர், போன்றவர்களுக்கும், காந்திஜி, பெரியார் ஈ.வெ.ரா, ஆன்மீக, சமுதாய, சீர்த்திருத்த செம்மல்கள், அறிஞர் பெருமக்கள் போன்றோருக்கும் செலுத்தும் நன்றிக்கடன். இம்மாநாடு வெற்றிகரமாக நடக்க வாழ்த்துகிறேன்.

வணக்கம்! நன்றி!

ஆ. பத்மநாபன்

# சாதி ஏற்றத்தாழ்வின்

## தோற்றம் - வளர்ச்சி - இன்றைய நிலைகள் -அகற்றும் வழிகள்

( பேராசிரியர் முனைவர் மு. தெய்வநாயகம் அவர்களின் புதிய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.)

□ முனைவர் தெ. தேவகலா M.A., M.Phil., Ph.D.,

**மாநாட்டில் ஒளிக் காட்சியாக (LCD Projector) வரலாற்றடிப்படையில் விளக்கப்பட்ட 84 கருத்து □ குறிப்புகள் (Slides) இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.**

**1**
**முதல் நிலை**
இன வேறுபாடு

**2**
**இரண்டாம் நிலை**
- இனக்குழுக்கள் இடையே போர்

ஓர் இனம் அடுத்த இனத்தை வெற்றிக் கொள்ளுதல்

ஆட்சியைக் கைப்பற்றுதல்

**3**
**மூன்றாம் நிலை**
- தோல்வி கண்ட இனத்தை வெற்றி கொண்ட இனம் அடிமைப்படுத்தி ஆளுதல்

**4**
**நான்காம் நிலை**
இன அடிமைத்தனத்தின் விளைவு இனவாதம்

**5**
**ஐந்தாம் நிலை**
- அடிமைத்தனத்தை நிலைநிறுத்தும் அரசியல் சட்டத்தை உருவாக்குதல்
- இன வெறிக்கு அடிப்படை அரசியல் ஆதிக்கமும் அடிமைத்தனத்தை நிலைநிறுத்தும் அரசியல் சட்டமும்

**6**
**ஆறாம் நிலை**
- அடிமைப்படுத்தப்பட்ட இனம் பெரும்பான்மையாக இருந்தாலும் அந்த இனத்தின் ஒற்றுமையைச் சிதைக்க அதைப் பல பிரிவுகளாக உடைத்தல்

**7**
**ஏழாம் நிலை**
- உடைக்கப்பட்ட பிரிவுகளின் இடையே நிலையான பொருளாதார ஏற்றத்தாழ்வை உருவாக்குவதற்கு நிலையான தொழில் வேற்றுமையை புகுத்தல்

**சில சிறு குறிப்புகள்**

**I**

**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கை உருவாவதற்கான பின்னணி**

உலகில் பல்வேறு இனக் குழுக்கள் உள்ளன.

இனக்குழுக்கள் இடையே போர் ஏற்படும்போது ஓர் இனம் அடுத்த இனத்தை வெற்றி கொள்ளுகின்றது.

வெற்றி பெற்ற இனம் ஆட்சியைக் கைப்பற்றி தோல்வி அடைந்த இனத்தை அடிமைப்படுத்தி ஆளுகின்றது.

இதனால்,

வெற்றி பெற்ற இனம்

உயர்ந்த இனம்

என்றும்

தோல்வி அடைந்த இனம் தாழ்ந்த இனம் என்றும் இழிவுபடுத்துகின்றது.

**8**
**எட்டாம் நிலை**
- நிலையான பொருளாதார ஏற்றத்தாழ்வை நியாயப்படுத்தும் ஆன்மீக விளக்கம் கொடுத்தல்

**9**
**ஒன்பதாம் நிலை**
- ஆன்மீக விளக்கம் கொடுக்கப்பட்டு, ஏற்றத்தாழ்வு சிதையாமல் பாதுகாக்கும் உத்தியாக ஊடகங்களை அடிமைப் படுத்தி, அவற்றின் வழி மூளைச் சலவை செய்தல்

**10**
**பத்தாம் நிலை**
- அரசியல் ஆதிக்கத்தையும்
- மத நம்பிக்கையையும்
- மூளை சலவை செய்யும் ஊடகங்களையும்

பயன்படுத்தி அடுத்த இனத்தை நிலையாக அடிமைப்படுத்தல்

**11**
**தொகுப்பு □ 1**
1. இனக் குழுக்கள்
2. இனப் போர் □ ஆட்சியைக் கைப்பற்றுதல்
3. தோல்வியுற்ற இனத்தை அடிமைப்படுத்தல்
4. இனவாதம்
5. **அடிமைத்தனத்தை நிலை நிறுத்தும் அரசியல் சட்டம் □ உருவாக்கம்** ஆட்சி + அரசியல் சட்டம்

**12**
**தொகுப்பு □ 2**
6. பெரும்பான்மையாக உள்ள இனத்தைப் பல பிரிவுகளாக உடைத்தல்
7. பொருளாதார ஏற்றத்தாழ்வை உருவாக்கும் நிலையான தொழில் வேற்றுமையை உருவாக்கல்
8. நிலையான பொருளாதார ஏற்றத்தாழ்வை நியாயப்படுத்தும் ஆன்மீக விளக்கம்

**13**
**தொகுப்பு □ 3**
9. ஊடகங்களைப் பயன்படுத்தி மூளைச் சலவைச் செய்தல்
10. ஆட்சி + மத நம்பிக்கை + ஊடகங்களைப் பயன்படுத்தி நிலையாக அடிமைப்படுத்தல்

**வேதங்களும் வேதாந்தமும்** 21
வேதாந்தக் கொள்கையை விளக்கும் சமஸ்கிருத இலக்கியங்களில் அடிப்படைக் கோட்பாடுகளாக மூவொருமைக் கோட்பாடு, அவதாரம், ப□ நிறைவேற்றம், பாவ மன்னிப்புக் கோட்பாடு, நம்பிக்கை வழி மீட்புக் கோட்பாடு ஆகியவை விளங்குகின்றன.

**ஒருவருடைய செயலுக்குக் காரணம்** 14
- "ஒருவருடைய செயலுக்குக் காரணம் அவருடைய சிந்தனை:
- ஒருவருடைய சிந்தனைக்குக் காரணம் அவருடைய நம்பிக்கை:
- ஒருவருடைய நம்பிக்கைக்குக் காரணம் அவருடைய கொள்கை:
- ஒருவருடைய கொள்கைக்குக் காரணம் அவர் பின்பற்றும் மதம்.:"

**சாதி ஏற்றத்தாழ்வின் தோற்றம்** 15
சாதி ஏற்றத்தாழ்வின் தோற்றத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமெனில் சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கைக்கு முற்பட்ட இந்தியாவின் பழமையான இலக்கியங்களை அறிந்து கொள்வது மிக மிக இன்றியமையாதது.

**பழமையான இந்திய மொழிகள்** 16
இந்திய மொழிகளில் மிகவும் பழமையானவை தமிழும் சமஸ்கிருதமும். இவற்றில் கி.மு. விலேயே கல்வெட்டுகளைக் கொண்ட மொழி தமிழ் மொழி.

**சமஸ்கிருதம் என்றால் என்ன?** 17
- சமஸ்கிருதம் என்றால் நன்றாகச் செய்யப்பட்டது என்பது பொருள்.
- செய்யப்படுவது பொம்மை.
- பிறப்பது குழந்தை.

**அசோகரின் கல்வெட்டுகளில் ஒன்று கூட சமஸ்கிருதத்தில் இல்லையே. ஏன்?** 18
கி.பி. அசோக மன்னனின் கல்வெட்டுகள், அக்காலத்தில் வழக்கில் இருந்த இந்திய மொழிகளிலும், அவரது அரசாட்சியில் இருந்த வெளிநாட்டு மொழிகளான கிரேக்கம், அராமிக் மொழிகளிலும் உள்ளன. ஆனால், அசோகரின் கல்வெட்டுகளில் ஒன்றுகூட சமஸ்கிருதத்தில் காணப்படவில்லையே. ஏன்?

**சமஸ்கிருதம்** 19
- கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன் இந்தியாவிலுள்ள கல்வெட்டுகளில் தமிழ், பா□, அர்த்தமாகதி, கிரேக்கம், அராமிக் போன்ற மொழிகள்காணப்படு கின்றனவே தவிர சமஸ்கிருதம் காணப்படவில்லை.

**வேதங்களும் வேதாந்தமும்** 20
- வேதங்களை உருவாக்கியவர் வேத வியாசர்.
- வேத வியாசர் வேதாந்தக் கொள்கையை உடையவர்.

இதனால், இனவாதம் உருவாகிறது.

வெற்றி கொண்ட இனம் தோல்□ அடைந்த இனத்தைத் தொடர்ந்து நசுக்கி, அடிமைப்படுத்தி, அழுத்திட

அரசியல் சட்டத்தை உருவாக்குகின்றது.

அடிமைப்படுத்தப்பட்ட இனம் பெரும்பான்மையாக இருந்தால் அது பல பிரிவுகளாக உடைக்கப்பட்டு,, உடைக்கப்ட்ட பிரிவுகளிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வை உருவாக்கும் நிலையான தொழில் வேற்றமை புகுத்தப்படுகிறது.

(எ□டு) மலம் அள்ளும் தொழிலையோ, பிணம் தூக்கும் தொழிலையோ யாரும் செய்ய விரும்புவதில்லை. ஆனால், தோல்வி அடைந்த இனத்தின் மீது வெற்றி அடைந்த இனம் ஆதிக்கம் செய்வதை எதிர்ப்பவர்களை இந்தத் தொழில்களைச் செய்யுமாறு , வற்புறுத்துகின்றனர். எனவே, வேறு வழியின்றி அவர்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட இந்தத் தொழில்களைச் செய்கின்றனர்.

இக் கொடிய நிலையை யாரும் எதிர்த்துக் கேட்காதபடி,

ஏற்றத்தாழ்வை நியாயப்படுத்தும் ஆன்மீக விளக்கம் கொடுக்கப்படதை இந்தியாவில் காணலாம்.

அவர்கள் கருத்துகளைப் பரப்ப தொலைக்காட்சி, செய்தித்தாள் போன்ற ஊடகங்களைப் பயன்படுத்தி,

மூளைச் சலவை செய்கின்றனர்.

(எண் 1 முதல் 13 வரை).

**வேதங்களும் வேதாந்தமும்** 22
வேதத்திற்குப் பின்னர் உருவானதே வேதாந்தக் கொள்கை.
வேதாந்தக் கொள்கையினரால் வேதாந்தக் கொள்கையை இந்தியா முழுவதும் பரப்பு வதற்காக உருவாக்கப்பட்டதே, சமஸ்கிருதம்.

**சமஸ்கிருதம் உருவாகக் காரணமான 7 மொழிகள்** 23
1. தமிழ்
2. பா□
3. அர்த்தமாகதி
4. பாரசீகம்
5. கிரேக்கம்
6. இலத்தீன்
7. அரமேயம்

**முதல் சமஸ்கிருத கல்வெட்டு** 24
கி.பி. 150இல் தான் முதன் முதல் சமஸ்கிருதக் கல்வெட்டு காணப்படுகிறது.

**வேதங்கள்** 25
வேதங்கள் எழுத்துருவம் பெற்றது சமஸ்கிருதத்தில்.
சமஸ்கிருதக் கல்வெட்டு முதன்முதல் கி.பி. 150□ல் தான் காணப்படுகிறது.
எனவே, வேதங்களின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது எனக் கொள்ள வேண்டியுள்ளது.

**சங்க இலக்கியங்கள்** 26
தமிழிலுள்ள சங்க இலக்கியங்களின் காலம் ஏறக்குறைய கி.மு. 3ஆம் நூற். முதல் கி.பி. 3 ஆம் நூற். வரை.

**சங்க இலக்கியங்கள் காட்டும் நான்கு வகைத் தொழிகள்** 27
- ♦ அந்தணர்
- ♦ அரசர்
- ♦ வணிகர்
- ♦ வேளாளர்

இது நிலையான தொழில் வேற்றுமை இல்லை

**வேற்றுமை** 28
- தொழிலால் வேற்றுமை
- படிப்பால் வேற்றுமை
- பணத்தால் வேற்றுமை
- பதவியால் வேற்றுமை

போன்ற இவை உலகில் எல்லா இடங்களிலும் உண்டு. ஆனால், இவை பிறப்பால் முத்திரை குத்தப்பட்டுள்ள சாதி ஏற்றத்தாழ்வு அல்ல.

**தொழில் வேற்றுமை** 29

“வேற்றுமை உள்ள நூற்பாலுள்ளம்
கீழ்ப்பால் ஒருவன் கற்கின்
மேற்பால் ஒருவன் அவன்கட் படுமே.”
(புறநானூறு □ 183)

“தொழில் வேற்றுமை உள்ள நூற்பால்” என்பது நிலையான தொழில் வேற்றுமை இல்லை என்பது நோக்கத்தக்கது.

**மெகஸ்தனிஸ் கண்ட சமுதாயப் பிரிவுகள்** 30

1. மெய்யியலாளர்
2. உழவர்
3. இடையர் மற்றும் வேட்டுவர்
4. வணிகர், உடலுழைப்பாளர்
5. போராளி
6. கண்காணியர்
7. ஆலோசகர் / தலைவர் / மதிப்பீட்டாளர் (அரசோடு தொடர்புடையோர்)

**வேறு; வேறு.** 31

- சாதி ஏற்றத்தாழ்வு என்பது வேறு;
- தொழில் வேற்றுமை என்பது வேறு.

**வேறு; வேறு.** 32

- சங்க இலக்கியம் காட்டும் சமுதாயத்தில் தொழில் வேற்றுமை இருந்ததே தவிர சாதி ஏற்றத்தாழ்வு இல்லை.
- இந்தியாவில் சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை உருவாக்கியவர் ஆரியர்.

**ஆரியர் யார்?** 33

1. பாரசீகர் □ கி.மு. 6ஆம் நூற்.
2. கிரேக்கர் □ கி.மு. 4ஆம் நூற்.
3. சகர் □ கி.மு. 2ஆம் நூற்.
4. குஷானர் □ கி.பி. முதலாம் நூற்.
5. ஹுணர் □ கி.பி. 4ஆம் நூற்.
6. ரோமர் □ கி.மு. 4ஆம் நூற். (வணிகம்)

**கி.பி.7ஆம் நூற்றாண்டு** 34

- ஆரியர் கி.பி.7ஆம் நூற்றாண்டில்
- வட இந்தியாவில்
- ‘மவுண்ட் அபு’ வில் ஒன்றிணைந்து, ஹர்ஷவர்த்தனைக் கொன்று,
- ஆட்சியைக் கைப்பற்றினர்.

**ஆரியவர்த்தம்** 35

- கி.பி. 7 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரை, வட இந்தியாவின் பெரும்பகுதியைப் பிடித்து ஆரியர் ஆட்சி செய்தனர்.
- அவர்கள் கைப்பற்றிய பகுதி ‘ஆரியவர்த்தம்’ அல்லது ‘ஆரியநாடு’ என்று குறிப்பிடப்படுகிறது.

**ஆரிய வர்த்தத்தில் ஆரியப் பிரிவுகள்** 36

- ♦ புரோகிதர்
- ♦ சத்திரியர்
- ♦ வைசியர்

## II
## தமிழ்
## சமஸ்கிருதம்

இந்தியாவின் பழமையான மொழிகள் தமிழ், சமஸ்கிருதம்.

இவற்றுள் மிகப் பழமையானது தமிழ் என்பதும்

முதல் சமஸ்கிருதக் கல்வெட்டு காணப்படுவது கி.பி.150இல்தான் என்பதும்

சமஸ்கிருதம் ஆரியர்களின் மொழி அன்று; அது தோமா வழி கிறிஸ்தவர்களாகிய வேதாந்தக் கொள்கையினர் உருவாக்கிய மொழி என்பதும்

எண் 16 முதல் 25 வரை விளக்கப்பட்டுள்ளன.

## III

## சாதி ஏற்றத்தாழ்வு இந்தியரின் பழமையான பண்பாடா?

இல்லவே, இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுவதுதான் இந்தியர்களின் / தமிழர்களின் வரலாறு.

வெளிநாட்டி□ருந்து நம் நாட்டிற்கு வந்த மெகஸ்தனிஸ் நம் சமுதாயம் பற்றி எழுதிய வரலாற்றுக் குறிப்பில் தொழில் அடிப்படையிலான வேற்றுமையை மட்டுமே குறிப்பிட்டிருக்கின்றாரே தவிர சாதி ஏற்றத்தாழ்வைக் குறிப்பிடாததை கருத்து □ குறிப்பு எண் 30 இல் தெளிவாகக் காணலாம்.

இந்தியர்களின் / தமிழர்களின் பழமையான இலக்கியங்களில் உயர்ந்த இனம், தாழ்ந்த இனம் என்ற கருத்தோ, உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற கருத்தோ எள்ளளவும் காணப்படவில்லை. சங்க இலக்கியங்களில் இன, சாதி, ஏற்றத்தாழ்வுக் கொள்கைக்குச் சிறிதும் இடமில்லை.

**ஆரிய வர்த்தத்தில் திராவிடப் பிரிவுகள்** 37

- ♦ சூத்திரர்
- ♦ பஞ்சமர்

**ஆரிய ஆட்சியில் குடியுரிமை** 38

- சதுர்வர்ணம்
  சதுர் = நான்கு; வர்ணம் = நிறங்கள்
- புரோகிதர்
- சத்தரியர்
- வைசியர்
- சூத்திரர்

**ஆரிய ஆட்சியில் குடியுரிமை அற்றோர்** 39

- பஞ்சமர்

**மனுநூல் கொள்கையின்படி திராவிடராகிய சூத்திரர், பஞ்சமர்** 40

- ஆரியருடன் தங்களை ஒன்றுபடுத்திய திராவிடர்கள் மிகவும் உயர்ந்த சாதியினர்
- காட்டிக் கொடுத்தவர்கள் உயர்ந்த சாதியினர்
- அடிபணிந்தவர்கள் இடைப்பட்ட சாதியினர்
- எதிர்த்தவர்கள் கீழ்ச்சாதியினர் அல்லது தீண்டத்தகாதோர்
- மலைக்கு ஓடிச்சென்றவர்கள் மலைச் சாதியினர்

**தமிழர்கள் குருக்கள், மெய்யியலாளர்கள்** 41

தமிழர்களின் குருக்கள், மெய்யியலாளர்கள், பறையர், பார்ப்பார் , அந்தணர்

- பறைதல் = சொல்லுதல்; முக்காலத்தையும் சொல்லும் மெய்யியலாளர்
- பார்ப்பார் = எதையும் ஆராய்ந்து பார்ப்பவர் □ தமிழ்த் தலைவர்களைக் குறிக்கும் சொல்.
- அந்தணர் = மற்ற எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுபவர்

42

- பார்ப்பானுக்கு மூத்த பறையன்
- கேட்பாரில்லாமல் கீழ்ச் சாதியானான்

என்னும் பழமொழி, பேர் கொண்ட பார்ப்பனராகிய பிராமணருக்கு முன் தமிழர் சமயக் கோவில்களில் அர்ச்சகர்களாக பறையர்களே இருந்துள்ளனர் என்பதைக் காட்டுகிறது.

43

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்
தன்னை அர்ச்சித்தால்
போர்க் கொண்ட வேந்தர்க்கு பொல்லாத
வியாதியாம்
பார்கொண்ட நாட்டில் பஞ்சமுமாம் என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்து ரைத்தானே
□ திருமூலர்

நந்தி □ குரு

**சாதி ஏற்றத்தாழ்வு கொள்கையின் ஊற்று** 44

சாதி ஏற்றத்தாழ்வு கொள்கையின் ஊற்றிடம் சங்கர மடங்கள்

**ஆதிசங்கரர்** 45

ஆதிசங்கரர் சங்கரமடங்களை உருவாக்கினார். இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட மனுநூலை மனுதர்ம சாஸ்திரமாக ஆக்கினார்.

**சாதி ஏற்றத்தாழ்வு கொள்கைக்கு மத அங்கீகா** 46

சாதி, இன ஏற்றத்தாழ்வு கொள்கைக்கு மத அங்கீகாரம், கொடுக்க தமிழர் சமயமாகிய சைவ, வைணவ சமயங்கள் பயன்படுத்தபட்டன.

**சாதி ஏற்றத்தாழ்வு கொள்கைக்கு மத அங்கீகா** 47

தோமா வழித் தமிழ் கிறிஸ்தவமாகிய தமிழர் சமயத்தின் அடிப்படைக் கொள்கைகள் திரிக்கப்பட்டன.

**சாதி ஏற்றத்தாழ்வு கொள்கைக்கு மத அங்கீகா** 48

திரிக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் சாதி, இன ஏற்றத்தாழ்வுக் கொள்கைக்கு மத அங்கீகாரம் கொடுக்கப்பட்டது.

**சங்கரமடங்கள்** 49

- வடக்கில் ஜோஷி மடம் □ உத்தரபிரதேசம்
- கிழக்கில் பூரி மடம் □ ஒரிசா
- மேற்கில் துவாரகா மடம் □ குஜராத்
- தெற்கில் சிருங்கேரி மடம் □ கர்நாடகம்

பிற்காலத்தில் மிக அண்மையில் (ஏறக்குறைய 200 ஆண்டுகட்கு முன்பு) உருவாக்கப்பட்டதே காஞ்சி சங்கரமடம்.

**இந்துத்துவம் (Hinduism)** 50

இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையின் வேறு பெயர்கள்

- 1. மனுதர்மம்
- 2. சனாதனதர்மம்
- 3. வர்ணாச்சிரம தர்மம்
- 4. பிராமணியம்
- 5. சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கை

**இந்துத்துவம்** 51

- மனுநூல் (Law of manu)
  சர் வில்□யம் ஜோன்ஸ் கி.பி.1794 மனுநூல் கொள்கைக்குக் கொடுக்கப்பட்ட பெயர் இந்துத்துவம். 'Hinduism'

**இந்துத்துவம் □ இந்து மதம்** 52

இந்துத்துவா என்பது வேறு;
இந்து மதம் என்பது வேறு;

**இந்துத்துவம் □ இந்து மதம்** 53

- இந்துத்துவா 'இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கை
- இந்து மதம்' சைவ, வைணவ சமயங்களாகிய தமிழர் சமயம்
- கி.பி.1794 க்குப் பின்பே இந்து மதம் எனும் சொல் உருவாக்கப்பட்டது.

சங்க இலக்கியம் காட்டும் சமுதாயத்தில்

**அந்தணர்**

**அரசர்**

**வணிகர்**

**வேளாளர்**

என்னும் தொழில் வேற்றுமை இருந்ததே தவிர, பிறப்பு அடிப்படையிலான இன, சாதி ஏற்றத்தாழ்வு இல்லை.

ஒரே குடும்பத்தில் தந்தை அந்தணராக, மகன் அரசராக, இன்னொரு மகன் வணிகராகவோ, வேளாளராகவோ இருப்பர். ஆனால், அவர்களுக்குள்ளே தொழில் அடிப்படையில் வேற்றுமை இருந்ததே தவிர அனைவரும் ஒரே குடும்பத்தினரே.

எனவே, பிறப்பால் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் இன, சாதி ஏற்றத்தாழ்வைச் சங்க கால சமுதாயத்தில் காண முடியாது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன்பு இந்தியாவில் இன, சாதி ஏற்றத்தாழ்வு உருவாகவில்லை.

இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை உருவாக்கியோர் ஆரியர்.

ஆரியர் யார் என்பதையும் (எண் 33) எப்போது அவர்கள் ஆட்சியைப் பிடித்து, நம்மை அடிமைப்படுத்தும் இன, சாதி

**இந்து மதம் அடிப்படைக் கோட்பாடுகள்** 54

1) மூவொருமைக் கோட்பாடு
2) அவதாரக் கோட்பாடு
3) ப□நிறைவேற்றக் கோட்பாடு
4) பாவ மன்னிப்புக் கோட்பாடு
5) விசுவாசத்தினால் மீட்புக் கோட்பாடு

**இந்துத்துவம் □ இந்து மதம்** 55

- இந்து மதம் என்பது மாளிகை; இந்துத்துவா என்பது பாம்பு.
- இந்துமதத்திற்குள் இந்துத்துவா என்பது மாளிகைக்குள் பாம்பு.
- பாம்பை விரட்டிவிட்டு மாளிகையைக் காக்க வேண்டும்.

**இந்துத்துவம் □ இந்து மதம்** 56

- மாளிகையின் மீது கல் எறியக் கூடாது;
- பாம்பை விரட்டிவிட்டு மாளிகையைக் காக்க வேண்டும்.

**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை? □ 1** 57

- அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று கூறி தமிழக அரசு 200க்கும் மேற்பட்ட தமிழினத் தவர்க்கு அர்ச்சகர் பயிற்சி கொடுத்த போதிலும் இன்று வரை அவர்கள் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். ஏன்?

**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை? □ 2** 58

- காரணம்
- அவர்கள் ஆரியப் பிராமணர்களல்லர்;
- அவர்கள்
- தமிழினத்தவர்கள்.

**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை? □ 3** 59

- தமிழக அரசால் நியமிக்கப்பட்ட
- மஹாராஜா கமிஷன் தீர்வு கூறி, பரிந்துரைகள் செய்து இருந்தபோதிலும்
- இன்று வரை அது நிறைவேற்றப்படாமல்
- தமிழின அர்ச்சகர்கள்
- வெளியே நிறுத்தப்பட்டுள்ளனர்.

**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை? □ 4** 60

- தாழ்த்தப்பட்டவருக்குத்
- கல்லறை தனி, டம்ளர் தனி கிணறு தனி, பாதை தனி.

என இவை போன்றவை இன்று வரை நடைமுறையில் காணப்படுவது தமிழின இழிவைக் காட்டுவதாய் உள்ளது.

61
**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை? ☐ 4**

இலங்கையில் தமிழினம்
அழிக்கப்பட்டபொழுது
தாய்த் தமிழக மக்கள் எவ்வளவோ போராடியும்
தங்களைத் தாங்களே தீயிட்டு அழித்துக் கொண்டு போராடியபோதும்
இலங்கையில் தமிழினம் கொடுமையாக அழிக்கப்பட்டமை
மிகுந்த வேதனைக்குரியது;

62
**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை? ☐ 6**

மிகவும் பழமையான குமரிக் கண்டம்,
பூம்புகார் நாகரிகத்துக்கு உரியவர்களும்
டைனோசர் முட்டைகளும்
குவியல் குவியலாகக் கண்டெடுக்கப்பட்ட கற் கருவிகளைக் கொண்டதுமான
தமிழகத்திற்கு உரிய தமிழின மக்கள்
தம் சொந்த மண்ணில் அடிமைகளாய் வாழ்கின்றனர்.

63
**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை? ☐ 7**

இந்திய இறையாண்மைக்கு ஏற்ப
கேரள நாட்டைக் கேரளரும்
கன்னட நாட்டைக் கன்னடரும்
தெலுங்கு நாட்டைத் தெலுங்கரும் ஆள
தமிழ் நாட்டை மட்டும்
தமிழரல்லாதார் ஆளும் அவல நிலை
இன்று வரை தொடர்கின்ற பரிதாப நிலையில் தமிழினம் உள்ளது.

64
**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை? ☐ 8**

எனவேதான், தமிழர் சமயமாகிய
சைவ, வைணவக் கோவில்களில்
தமிழுக்கும் இடமில்லை,
தமிழருக்கும் இடம் இல்லை.
தமிழின மக்கள் தம் சொந்த மண்ணில் அடிமைகளாய் வாழ்கின்றனர்.

65
**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை? ☐ 9**

அரசாங்க முக்கிய உயர்ந்த பதவிகளிலும்
தமிழினத்தவர் இங்கும் அங்குமாக விரல்விட்டு
எண்ணக் கூடிய பரிதாப நிலையிலேயே உள்ளனர்.
தமிழரின் நிலங்களும் வளங்களும்
படிப்படியாக அந்நியர் வசமாகியுள்ளன.

ஏற்றத்தாழ்வுக் கொள்கையை உருவாக்கினர் என்பதையும் எண் 34 முதல் 41 வரையுள்ள கருத்து ☐ குறிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன.

## IV

## இந்துத்துவம் இந்து மதம்

இந்துத்துவா என்பது வேறு;
இந்து மதம் என்பது வேறு;

இந்துத்துவா என்பது இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கை

இந்து மதம்' என்பது சைவ, வைணவ சமயங்களாகிய தமிழர் சமயம். இந்து மதம் என்பது மாளிகை இந்துத்துவம் என்பது பாம்பு எனவே பாம்பை விரட்டி விட்டு மாளிகையை காக்க வேண்டும். இவற்றைக் குறித்து எண் 50 முதல் 56 வரை விளக்கப்பட்டுள்ளன.

## V

## இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை குறித்து எண் 59 முதல் 68 வரை விளக்குகின்றன.

66
**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை? ☐ 10**

தமிழினத்தவருள்
பிறப்பால் தம்மை உயர்வாகக் கருதும் ஆணவமுடையோர்
பிற தமிழினத்தவரை இழிவாக
எண்ணுவதும் நடத்துவதும்
தொடர்ந்து காணப்படுகின்றன.

67
**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை? ☐ 11**

யாதும் ஊரே யாவரும் கேளிர்
எனும் தமிழரின் உயர்ந்த சிந்தனையை
நடைமுறைக்குக் கொண்டு வர எண்ணாமல்
தமிழருக்குள்ளேயே தமிழினத்தைக் காட்டிக் கொடுத்து வாழும் பரிதாப நிலை தமிழின விடுதலைக்குத் தடையாயிருக்கின்றது.

68
**இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினத்தின் இன்றைய நிலை? ☐ 12**

ஊடகங்களைத் தமிழினத்தை
அடிமைப்படுத்துவோரும்
தமிழினத்தை அடக்கி ஆள்வோரும் தம் விருப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்துவதால்
தமிழினத்தவரின் உண்மையான பிரச்சனைகள்
உலகிற்கு வெளி வராமலேயே போய் விடுகின்றன.

69
**தமிழர் ஆன்மவியல் ☐ 1**

உலகிலேயே எழுத்து, சொல்,
பொருள் யாப்பு, அணி இவற்றுள்
தமிழ் மொழியில் மட்டுமே பொருளுக்கு இலக்கணம் உள்ளது.
உலகப் பெருஞ் சமயங்களுக்குக்
காப்பியங்களைக் கொண்ட ஒரே மொழி தமிழ் மொழி.

70
**தமிழர் ஆன்மவியல் ☐ 2**

உயிர் வேறு; ஆன்மா வேறு.
உயிருக்கும் ஆன்மாவிற்கும்
உள்ள வேறுபாடுகளை
ஆழமாக விளக்கியிருப்பது
தமிழர் ஆன்மவியல்.

71
**தமிழர் ஆன்மவியல் ☐ 3**

உடலைப் பற்றிய கல்வி அறிவியல்
உயிரைப் பற்றிய கல்வி மெய்யியல்
ஆன்மாவைப் பற்றிய கல்வி ஆன்மவியல்.

72
**தமிழர் ஆன்மவியல் ☐ 4**

சிற்றான்மா ☐ மனிதன்
பேரான்மா ☐ கடவுள்

**73** **தமிழர் ஆன்மவியல் □ 5**

சிற்றான்மாவையுடைய மனிதர் அனைவரும் பேரான்மாவாகிய இறைவன் வாழும் கோவில் என்பதை விளக்குவது தமிழர் ஆன்மவியல்.

**74** **தமிழர் ஆன்மவியல் □ 6**

1. உடல்
2. உயிர்
3. ஆன்மா
4. கடவுள்
5. ஆணவம்

இவற்றை ஆழமாக விளக்குவது தமிழர் ஆன்மவியல்

**75** **தமிழர் ஆன்மவியல் □ 7**

கடவுளை அறிவியல் வழியில் நிலைநாட்டிக் காட்டுவது தமிழர் ஆன்மவியல்

**76** **தமிழர் ஆன்மவியல் □ 8**

மனிதன் கடவுள் வாழும் ஆலயம்
நீங்கள் கடவுளுடைய ஆலயம் (திருமறை)
நடமாடக் கோவில் (திருமந்திரம்)

**77** **தமிழர் ஆன்மவியல் □ 9**

மனிதர் அனைவருமே ஆன்மாவையுடையவர்கள் என்பதால் மனிதருக்குள் ஏற்றத் தாழ்விற்கு இடமேயில்லை, ஏனெனில், ஆன்மாவில் ஏற்றத்தாழ்வில்லை.

**78**

சிற்றான்மாவையுடைய மனிதர் அனைவரும் பேரான்மாவாகிய இறைவன் வாழும் கோவில் என்பதால் இன, சாதி ஏற்றத்தாழ்விற்கு இடமில்லை.

**79**

எல்லோருக்கும் எல்லாம் என்பதை நடைமுறைப்படுத்த பயன்படுவது தமிழர் ஆன்மவியல்.

## V

**சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழினமும் இனவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள உலக சமுதாயமும் மற்றும் பயங்கரவாதம் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள உலக சமுதாயமும் சாதி, மத, இனப் பாதிப்புகளி□ருந்து விடுதலையடைய வழி வகுப்பது தமிழர் ஆன்மவியல் என்பது குறித்து எண் 69 முதல் 84 வரை சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.**

**மேலே கூறியவற்றை ஆய்வு அடிப்படையில் ஆழமாகத் தெரிந்து கொள்ள விரும்புவோர் நமது அய்வேடுகளையும் வெயீடுகளையும் ஆழ்ந்து நோக்க வேண்டுகின்றோம்.**

**80**

தீவிரவாதத்திற்கோ, பயங்கரவாதத்திற்கோ சற்றும் இடமில்லாதது தமிழர் ஆன்மவியல்.

**81** **தமிழர் ஆன்மவியல் □ 4**

உலக சமுதாயத்தில் அன்பையும் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் உருவாக்குவது தமிழர் ஆன்மவியல்.

**82** **தமிழர் ஆன்மவியல் □ 4**

- தமிழர் ஆன்மவியல் உண்மைகள் வெளி வராத காலத்தில் இன இழிவைத் துடைக்க தந்தை பெரியார் கடவுள் மறுப்பாளரானார்.
- டாக்டர் அம்பேத்கார் தம்மை இழிவுபடுத்திய இந்து மதத்தி□ருந்து மாறி பௌத்த மதத்தவராக மாறினார்.

**83** **தமிழர் ஆன்மவியல் □ 4**

- தமிழின இழிவைத் துடைக்க
- கடவுள் மறுப்பாளராகவும் தேவையில்லை,
- மதம் மாறவும் தேவையில்லை.
- தமிழர் ஆன்மவியலைப் புரிந்து கொண்டால் போதும். தமிழின இழிவு நீங்கும்.

**84** **தமிழர் ஆன்மவியல் □ 4**

மேலும் விவரங்களுக்கு, முனைவர் மு. தெய்வநாயகம் எழுதியுள்ள நூல்களுள் ஆன்மவியல் தொடர்பான

1. ‘உலக சமயங்களை ஒன்றிணைக்கும் தமிழர் சமயமும் தமிழர் ஆன்மவியலும்’
2. உலக மொழிகளில் சிறந்தது தமிழ். எவ்வாறு?
3. சிவஞானபோதம்

ஆகிய நூல்களைக் காணலாம்.

# சந்தாதாரர் கவனத்திற்கு...



**தமிழர் சமயம் இதழுக்கான சந்தா செலுத்தாதவர்கள் ஆண்டுச் சந்தா ரூ.100/- செலுத்தி இதழைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**



# சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மை ஒழிப்பு

# மாநாட்டுத் தீர்மானங்கள்

## 19-05-2012 சனிக்கிழமை/பெரியார் திடல், எழும்பூர், சென்னை

1. ஒன்றே குலம்; ஒருவனே தேவன், யாதும் ஊரே யாவரும் கேளிர், சாதி இரண்டொழிய வேறில்லை... இட்டார் பெரியோர் இடாதோர் இழி குலத்தோர் என்ற உயர்ந்த கொள்கைகளோடு வாழ்ந்த தமிழர்களின் நாட்டின் மீது வேற்றவர் படையெடுத்து வந்து அவர்களை அடிமைப்படுத்தினர். இந்த அநியாயத்தை எதிர்த்த அரச பரம்பரையினரைத் தாழ்ந்த சாதிகள் என்றும், மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டு வேற்றவர்களுக்குக் காட்டிக் கொடுத்தவர்களை உயர்ந்த சாதிகள் என்றும், யார் ஆண்டாலென்ன என்றிருந்தவர்களை இடைப்பட்ட சாதிகள் என்றும் வகுத்தனர்.

   இதன் அடிப்படையில் தன் சாதி வேறொரு சாதியை விட உயர்ந்தது என்று எண்ணுவது ஒரு மனநோய். இத்தகைய மன நோயுள்ளவர்கள் இம் மனநோயி□ருந்து குணமடையும்படி இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

2. அதுபோல தன் சாதி வேறொரு சாதியை விடத் தாழ்ந்தது என்று எண்ணுவதும் ஒரு மன நோயே. இத்தகைய மன நோயுள்ளவர்கள் இம் மனநோயி□ருந்து குணமடையும்படி இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

3. சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மையாகிய மனநோய்க்கு ஏற்ற மருந்து மனிதனை மனிதனாக்கும் ஆன்மாவைப் பற்றிய அறிவாகிய **'தமிழர் ஆன்மவியல்'**. தமிழர் ஆன்மவியலை உலகமெங்கும் பரப்பும்படி இறைபணியாளர்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

4. தமிழர் ஆன்மவியலைப் போதிப்பது தமிழரின் ஞான நூலாகிய **'சிவஞானபோதம்'**. நாட்டிலுள்ள ஞானிகள் சிவஞானபோதத்தை அனைவருக்கும் கற்றுக் கொடுக்கும்படி இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

5. கல்விக் கூடங்களில் மாணவர்கள் அனைவரும் சிவஞானபோதத்தைக் கற்றுக் கொள்ளும்படி அதை ஒரு துணைப்பாட நூலாக ஏற்படுத்தும்படி தமிழக அரசை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

6. மனித மாண்புக்கு எதிரான தீண்டாமைக் கொடுமை பல ரூபங்களில் வெளிப்பட்டு மனித ஒற்றுமையைச் சீர்குலைக்கிறது. தீண்டாமையைக் கடைப்பிடிப்போர் அக் கொடுமையை விட்டொழிக்கும்படி இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

7. சாதிகளின் பெயரால் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் அரசு வழங்கும் இட ஒதுக்கீட்டை மத வேறுபாடு கருதாமல் சாதி அடிப்படையில் எல்லோருக்கும் வழங்கும்படி இம் மாநாடு இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

8. சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மையை ஒழிப்பதற்குத் துணையாக இருப்பது சாதிமாறிய திருமணங்கள். சாதிமாறி திருமணம் செய்தவர்களை

இம்மாநாடு பாராட்டுகிறது. சாதி மாறிய திருமணங்களை எல்லா சாதியினரும் ஊக்குவிக்க வேண்டுமென்றும், அவற்றைச் சாதிச் சங்கங்கள் முன்னின்று நடத்த வேண்டுமென்றும் இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

9. சாதி மாறித் திருமணம் செய்வோரின் பிள்ளைகளின் கல்விச் செலவை அரசே ஏற்றுக்கொள்ளும்படி இம்மாநாடு மத்திய, மாநில அரசுகளைக் கேட்டுக் கொள்கிறது.

10. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று தமிழக அரசு சட்டம் இயற்றி 207 மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, இள நிலை சைவ மற்றும் வைணவ அர்ச்சகர் என்ற பட்டமும் கொடுத்துள்ளது. இவர்கள் பணியேற்கச் சென்றபோது, தமிழர்களுக்கு உரிமையான தமிழ்நாட்டுக் கோவில்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் அந்நியரான ஸ்மார்த்தப் பிராமணர்களும், அவர்களுடைய தொண்டர்களும் மனு (அ)தர்மத்தின் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் தமிழ் இனத்திற்கு எதிராகத் தடையாணை பெற்று விட்டார்கள். இத்தடையாணையை ரத்து செய்து தமிழ் அர்ச்சகர்களைப் பணியிலமர்த்த ஆவன செய்யும்படி தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

11. தமிழர் சமயமான சைவ, வைணவ சமயங்களுக்கு 18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் கொடுத்த இந்து மதம் என்ற பெயரை மாற்றி, தமிழர் சமயம் என்றே அழைக்கும்படி சைவ, வைணவ அன்பர்கயைும் மத்திய, மாநில அரசுகளையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

12. சைவ, வைணவ சமயங்களுக்கு எதிரான சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையில் இயங்கும் சைவ, வைணவ மடங்கள் சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மையைக் கைவிடும்படி இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

13. சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கை உருவாவதற்கு முற்பட்ட இலக்கியங்களைக் கொண்டுள்ள ஒரே மொழி தமிழ் மொழி. எனவே, சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மையை ஒழிப்பதில் தமிழ்நாடு இந்தியா முழுவதற்கும் முன்னோடியாகச் செயல்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க இம்மாநாடு தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

# புற்றுநோய்ப் படுக்கையில் சுரந்த புனிதப் பாடல்

- தெ, தேவகலா

சிறந்த வாழ்வு எது?
பிறருக்குப் பயன் தரும் வாழ்வு எது?
சுயநல வாழ்வா?
பொதுநல வாழ்வா? (2)
சிந்தித்துப் பார்த்திடுவீர் □ என்றும்

1. கத்தும் கடலைப் பார் அதில்
முத்து, பவளம் பார் (2)
கட□ல் பிறந்தாலும்
அணிவோர் மகிழ்ந்திட
அள்ளித் தருகின்றதே! □ என்றும் (2)

2. வானுயர் மலையைப் பார் அதில்
வாசமாம் சந்தனம் பார் (2)
மலையில் பிறந்தாலும்
பூசுவோர் மகிழ்ந்திட
வாசமாய்த் தருகின்றதே. □ என்றும் (2)

3. அழகிய மரத்தைப் பார் அதில்
அரும்சுவை கனியைப் பார் (2)
மரத்தில் பிறந்தாலும் சுவைப்போர் மகிழ்ந்திட
சுவையாய்த் தருகின்றதே. □ என்றும் (2)

4. அன்பின் கடவுள் பார் அவர்
காட்டிய வழியைப் பார் (2)
மன்னுயிர் மகிழ்ந்திடத்
தன்னுயிர் ஈந்திட்ட
இறைவனின் மாண்பினைப் பார் □ என்றும் (2)

**Postal Date : 1st and 2nd of every month Date of posting : 21st of June 2012**
Egmore RMS Patrika Channel, Regd.with Registrar, News Paper of India
Registration Number of the Newspaper TNTAM / 2009 / 30866 Postal Registered No. TN / CCN / 513 / 10 - 12
WPP licence No. TN/PMG (CCR)/WPP - 188/10-12.
T.C.No.T.N TAM 18701 THAMIZHAR SAMAYAM R.Dis No : 220 / 09

தெலுங்கு நாட்டைத் தெலுங்கர் ஆளுகின்றார்கள்; கன்னட நாட்டைக் கன்னடர் ஆளுகின்றார்கள்; மலையாள நாட்டை மலையாளிகள் ஆளுகின்றார்கள்.

# "தமிழ் நாட்டைத் தமிழரே ஆள வேண்டும்"

## 17ஆவது
## பிரார்த்தனை - போராட்டம்

நாள்: 16.07.2012, திங்கட்கிழமை,
காலை 11.30 முதல் 1.30 மணி வரை

இடம்: பனகல் மாளிகை அருகில்,
சைதாப்பேட்டை, சென்னை

**அன்புடன் அழைக்கின்றோம்...**



**வாசகர்களின் அன்பான கவனத்திற்கு....**
**மாநாடு தொடர்பான செய்திகளைப் பின்வரும் நமது இணையதளத்தில் காணலாம்.**
**www.soulologyofthetamils.com**

**தமிழர் சமயம் இதழுக்கான சந்தா செலுத்தாதவர்கள் ஆண்டுச் சந்தா ரூ.100/- செலுத்தி இதழைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

| | | |
|---|---|---|
| **Editor, Publisher, Printer** | : | Dr.M.Deivanayagam Ph.D. |
| **Sub Editors** | : | Dr. D. Devakala, Ph.D. |
| | | Mr. Seerkazhi Siva. Chandrasekaran |
| **Printer** | : | D. Devavaram, Meipporul Printers, 278, Konnur High Road, Ayanpuram, Chennai - 600 023. |
| **Phone** | : | 26741526 |
| **Email** | : | **tamilarsamayam2010@gmail.com** |
| **Website** | : | **www.soulologyofthetamils.com** |
| | | **26743842** |

பெறுநர்

Owned and published by Dr. M.Deivanayagam, No.278, Konnur High Road, Ayanpuram, Chennai-600 023 and printed by D.Devavaram at Meipporul Achakam, No. 278, Konnur High Road.Ayanpuram, Chennai-600 023. **Editor**: Dr. M. Deivanayagam